செய்தி வெளியீடு எண்: 1097 நாள்: 14.12.2010

தமிழக அரசின் அழைப்பின்பேரில் மலேசியாவாழ் தமிழர்கள் அடங்கிய 45 கலைஞர்களைக் கொண்ட கலைக்குழுவினர் தமிழகத்திற்கு வருகைபுரிந்துள்ளார்கள். இக்கலைக்குழுவினர் 16.12.2010 அன்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் மற்றும் தஞ்சை மருத்துவக் கல்லூரியிலும், 19.12.2010 மதுரை கடம்பவனத்திலும், 21.12.2010 அன்று கன்னியாகுமரியில் புனித அந்தோனியர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்திலும், 23.12.2010 திருச்சிராப்பள்ளி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியிலும், 26.12.2010 சென்னை தீவுத்திடலிலும் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்த உள்ளனர்.

இந்தக் கலைநிகழ்ச்சிகள் மலேசியாவாழ் தமிழர் செபஸ்தியர் கலைக்குழு மற்றும் தமிழக அரசின் கலை பண்பாட்டுத்துறை இணைந்து வழங்கும் கலை நிகழ்ச்சிகளாகும். இந்த பல்சுவை கலை நிகழ்ச்சிகளில் கரகம், மயிலாட்டம், பொம்மையாட்டம், பின்னல் கோலாட்டம், ராஜாராணி ஆட்டம், குரலிசை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

இந்த நிகழ்ச்சிகளின் மூலம் இந்திய வம்சாவளி மலேசியாவாழ் தமிழர்கள் தங்களுடைய முன்னோர்களின் தாய்நாட்டை பார்க்கவும், அவர்களின் முன்னோர்கள் பற்றிய பல்வேறு கலை வடிவங்களைப் பார்ப்பதற்கும், தெரிந்துகொள்வதற்கும் ஒரு அரிய வாய்ப்பாக அமையும்.

மேலும், இந்நிகழ்ச்சிகளின் மூலம் மலேசியாவாழ் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் ஒரு நல்லுறவு ஏற்பட வாய்ப்பாகும் என்பதுடன் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சியடையவும் வழிவகுக்கும்.

மலேசியாவாழ் தமிழகர்கள் நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் அனைவரும் திரளாகக் கலந்துகொண்டு அக்கலைஞர்களை ஊக்கப்படுத்துமாறு கலை பண்பாட்டுத்துறை ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.